மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.05/2021
இ.ம.எண்.03/2020
அ.வ.எண்.64/2020

1. ராஜப்பன்
2. முருகன் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

1. சின்னு (எ) சின்னுசாமி
2. கோவிந்தராஜி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 04.10.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் கட்டளை 39 விதி 4 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

கடந்த 08.04.2021ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திலும், வருவாய் துறையினரிடமும் ஆவணங்களை கேட்டு விண்ணப்பித்திருந்தார். ஆனால் உரிய நேரத்தில் அந்த ஆவணங்களை பெற முடியவில்லை. மேலும் 1ம்மனுதாரரின் தகப்பனார் வயதானவர் என்பதால் அவரையும் பார்க்க வேண்டிய சூழ்நிலையும் இருந்தது. ஆகவே வழக்கறிஞரை சந்தித்து உரிய தகவல்களை வழங்காததால் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே 08.04.2021ல் மனுதாரர்களுக்கு எதிராக

ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற்போது வழக்கறிஞரை சந்தித்த போது தான் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என கூறி வழக்கு கோப்பை திருப்பி கொடுத்துவிட்டார். அதன் பிறகு புதிய வழக்கறிஞரை வைத்து மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே 08.04.2021ம் தேதியன்று மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 2ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யாகும். எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பியதன் பேரில் ஆஜராவதற்காக 03.08.2021ல் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வாய்தா பெற்றுவிட்டார். சட்டப்படி அழைப்பாணை பெற்றதிலிருந்து 90 நாட்களுக்குள் எதிருரை தாக்கல் செய்ய வேண்டும். ஆனால் 08.04.2021 வரை எதிருரை தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் மற்றொரு வழக்கான அ.வ.எண்.113/2020யை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். மேலும் 1ம்மனுதாரர் 193/2020 வழக்கை மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இரண்டு வழக்குகளிலும் ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளனர். மனுதாரர்களுக்கு வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் தெரியும். மேற்படி மனுவில் எவ்வித முகாந்திரம் இல்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 08.04.2021ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது எனவும், மனுதாரர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திலும், வருவாய் துறையினரிடமும் ஆவணங்களை கேட்டு விண்ணப்பித்திருந்தார் எனவும், ஆனால் உரிய நேரத்தில் அந்த ஆவணங்களை பெற முடியவில்லை எனவும், மேலும் 1ம்மனுதாரரின் தகப்பனார் வயதானவர் என்பதால் அவரையும் பார்க்க வேண்டிய சூழ்நிலையும் இருந்தது எனவும், ஆகவே வழக்கறிஞரை சந்தித்து உரிய தகவல்களை வழங்காததால் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய முடியவில்லை எனவும், எனவே 08.04.2021ல் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனவும், தற்போது வழக்கறிஞரை சந்தித்த போது தான் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என கூறி வழக்கு கோப்பை திருப்பி கொடுத்துவிட்டார் எனவும், அதன் பிறகு புதிய வழக்கறிஞரை வைத்து மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் எனவும், எனவே 08.04.2021ம் தேதியன்று மனுதாரர்/ 1ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய் எனவும், எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பியதன் பேரில் ஆஜராவதற்காக 03.08.2021ல் வாய்தா போடப்பட்டிருந்தது எனவும், அன்றைய தினம் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வாய்தா பெற்றுவிட்டார் எனவும், சட்டப்படி அழைப்பாணை பெற்றதிலிருந்து 90 நாட்களுக்குள் எதிருரை தாக்கல் செய்ய வேண்டும் எனவும், ஆனால் 08.04.2021 வரை எதிருரை தாக்கல் செய்யவில்லை எனவும், இந்நிலையில் மற்றொரு வழக்கான அ.வ.எண்.113/2020 யை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர் எனவும், மேலும் 1ம்மனுதாரர் 193/2020 வழக்கை மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் எனவும், இரண்டு வழக்குகளிலும் ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளனர் எனவும், மனுதாரர்களுக்கு வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் தெரியும் எனவும், மேற்படி மனுவில் எவ்வித முகாந்திரம் இல்லை எனவும்,

எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இ.நி.ம.எண்.3/20 இம்மனுவானது இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. ஆகவே இம்மனுவினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர்கள் இம்மனுவில் எதிர்வாதம் புரிய வாய்ப்பு வழங்கலாம் என்பதாலும், எதிர்மனுதாரர்களின் கட்சி அனைத்தும் ஏற்புடையதல்ல எனவும் இம்மனு அனுமதிக்கத்தக்கது எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/–செலவுத் தொகையாக அளிக்கும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/–செலவுத்தொகையாக 18.11.2021 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 19.11.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.